# ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளின்

# மதிப்பீடு மற்றும் தர நிர்ணயம்

**(14 அக்டோபர், 2014 வரையிலான திருத்தங்களின்படி)**

**<u>ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளின் மதிப்பீடு மற்றும் தர நிர்ணயத்திற்கான திட்டம்</u>**

## 1.0 வரையறை மற்றும் நோக்கம்

1.1 இந்தியாவிலுள்ள நவீனமயமாக்கப்பட்ட ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளை டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி மதிப்பிடுவதற்கும் தர நிர்ணயம் செய்வதற்கும் தேவைப்படும் அம்சங்களை இத்திட்டம் விவரிக்கிறது. இத்திட்டம் கீழ்க்கண்டவற்றிற்கு உதவும் பொருட்டு செயல்படுத்தப்படுகிறது.

a) ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகள், தங்களுடைய தற்போதைய நிலையை அறிந்திருப்பதுடன், மேம்பாட்டிற்கான வாய்ப்புகளை அடையாளம் காணுதல்.

b) ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகள், தங்கள் தொழிற்சாலையின் நம்பகத்தன்மையை அதிகரிப்பதுடன், தர நிர்ணயத்தை ஓர் ஆற்றல்மிக்க சந்தைப்படுத்துதலுக்கான கருவியாகவும் பயன்படுத்துதல்.

c) தங்கள் தரத் தேவைகளுக்குப் ஏற்ப தங்கள் பஞ்சினை பிரித்தெடுப்பதற்கு ஏற்ற ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளை பஞ்சு வியாபாரிகள் தேர்ந்தெடுக்க உதவுதல்.

d) தங்கள் தேவைகளுக்கு ஏற்ப பஞ்சினை பெறுவதற்காக, பொருத்தமான ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளை நூற்பாலைகள் தேர்ந்தெடுக்க உதவுதல்.

**e)** சுத்தமான பஞ்சிற்கான ஒரு **Brand-**ஐ உருவாக்குதல்.

1.2 இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு மற்றும் தர நிர்ணயம், சுயவிருப்பத்தின் அடிப்படையிலானது.

## 2.0 விளக்கங்கள்

### 2.1 மதிப்பீடு

திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகுதிவிதிகளின் அடிப்படையில் நவீனமயமாக்கப்பட்ட ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலையின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிர்வாக நடைமுறைகளின் மதிப்பீடு.

### 2.2 ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலை

சட்டபூர்வ அங்கீகாரம் பெற்ற, பருத்தியிலிருந்து பஞ்சினை பிரித்தெடுத்து, பஞ்சினை பொதிகளாக அழுத்துகின்ற செயல்முறையில் ஈடுபட்டுள்ள ஒரு தொழிற்சாலை.

குறிப்பு: பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெயைப் பிரித்தெடுக்கும் வசதியை அதே வளாகத்தில் கொண்டுள்ள ஒரு ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலையைப் பொறுத்தவரை, மதிப்பீட்டின் வரையறையானது ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் செயல்பாடுகளை மட்டுமே உள்ளடக்கியிருக்கும்.

### 2.3 நவீனமயமாக்கப்பட்ட ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலை

**பிற்சேர்க்கை-I**-ல் பட்டியலிடப்பட்டுள்ள, குறைந்தபட்சமாகப் பரிந்துரைக்கப்பட்ட தகுதிவிதிகளைப் பூர்த்தி செய்யும் ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலை.

## 2.4 உள்கட்டமைப்புக்கான அளவீடுகள்

இத்திட்டத்தில், நவீனமயமாக்கப்பட்ட ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலையின் மதிப்பீட்டிற்காக கருத்தில் கொள்ளப்படுகின்ற இயந்திரங்கள், கட்டுமானம் மற்றும் இதர உள்ளகட்டமைப்புகள்.

## 2.5 மேலாண்மை அளவீடுகள்

இத்திட்டத்தில், நவீனமயமாக்கப்பட்ட ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலையின் மதிப்பீட்டிற்காக கருத்தில் கொள்ளப்படுகின்ற மேலாண்மை அமைப்புகள், பணி நடைமுறைகள் மற்றும் பிரித்தெடுக்கப்பட்ட பஞ்சின் மாசளவு.

## 2.6 தர நிர்ணயம்

2.6.1 நவீனமயமாக்கப்பட்ட ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளை, உள்கட்டமைப்பு அளவீடுகள், மேலாண்மை அளவீடுகள் மற்றும் இத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள தர நிர்ணயத்திற்கான தகுதிவிதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளில் இடம்பெறச் செய்கின்ற செயல்முறை.

2.6.2 ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலையின் தர நிர்ணயம் என்பது, தரமான பிரித்தெடுக்கப்பட்ட பஞ்சினை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையின் திறன் குறித்த ஒரு தொழிற்சாலை மதிப்பீடேயன்றி, உற்பத்திப் பொருளுக்கான சான்றளிப்பாகக் கருதக்கூடாது.

## 2.7 கலப்பு (ஹைபிரிட்) தொழிற்சாலை

நவீனமயமாக்கப்பட்ட ஜின்னிங் வசதியையும் மற்றும் வழக்கத்திலுள்ள/ நவீனமயமாக்கப்படாத ஜின்னிங் வசதியையும் ஒரே வளாகத்தில் கொண்டிருப்பதுடன், பொதுவான உற்பத்தி வசதிகளைப் பகிர்கின்ற ஒரு ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலை.

# 3.0 நிர்வாக ஏற்பாடுகள்

## 3.1 மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு (Assessment Rating Cell - ARC)

ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளின் மதிப்பீடு மற்றும் தர நிர்ணயம் தொடர்பான விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலிப்பதற்காக டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி ஒரு தனிப் பிரிவை அமைத்துள்ளது. ஆர்வமுள்ள ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறுதல், தொழிற்சாலை மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக 2-உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமிக்க ஏற்பாடு செய்தல் மற்றும் பரிசீலனை/ஒப்புதல் பெறும் பொருட்டு, தொழில்நுட்பத் தர நிர்ணய தீர்வுக் குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக இக்குழுக்களின் மதிப்பீட்டு அறிக்கைகளைத் தொகுத்தல் ஆகியவை மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவின் முக்கிய செயல்பாடுகளில் அடங்கும்.

## 3.2 தொழில்நுட்பத் தர நிர்ணய தீர்வுக் குழு (Technical Rating Award Committee - TRAC)

அவ்வப்போது தேவைப்படும்போதெல்லாம் இத்திட்டத்தில் செய்ய வேண்டிய திருத்தங்கள் குறித்து யோசனை தெரிவிப்பது/பரிந்துரைப்பது மட்டுமின்றி, மதிப்பிடப்பட்ட ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளுக்கு முறையாக தர நிர்ணயங்களை ஒதுக்கீடு செய்யும் பணியும் இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொருந்தும் தரநிலையை நிர்ணயிப்பதற்காக, மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு அனுப்பும் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை மற்றும் மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவின் தொகுப்பு போன்ற ஆவணங்களை TRAC ஆராயும். தொழில்நுட்பத் தர நிர்ணய தீர்வுக் குழுவின் தலைவராக மும்பை, டெக்ஸ்டைல் கமிட்டியின் செயலர் செயல்படுவார் மற்றும் அதில் பின்வரும் உறுப்பினர்கள் இடம்பெற்றிருப்பார்கள்:

(i) இணை டெக்ஸ்டைல் ஆணையர் அல்லது துணை இயக்குனர் பதவிக்கும் கீழ்நிலையில் இல்லாத அவருடைய பிரதிநிதி.

(ii) இந்திய பருத்திக் கழகத்தின் (CCI) பிரதிநிதி.

(iii) டெக்ஸ்டைல்ஸ் கமிட்டியின் இயக்குனர் (EP & QA) அல்லது துணை இயக்குனர் பதவிக்கும் கீழ்நிலையில் இல்லாத அவருடைய பிரதிநிதி.

(iv) அவசியமானால், ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலை மதிப்பீட்டுக் குழுவின் அலுவலர்/கள்.

தொழில்நுட்பத் தர நிர்ணய தீர்வுக் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக மேலும் பல நபர்களை அழைக்கும் அதிகாரத்தை தொழில்நுட்பத் தர நிர்ணய தீர்வுக் குழு கொண்டுள்ளது. தர ஒதுக்கீட்டுப் பணிக்காக தேவைப்படும்போதெல்லாம் தொழில்நுட்பத் தர நிர்ணய தீர்வுக் குழு ஒன்றுகூடும்.

## 3.3 நிபுணர்கள் குழு

கல்வித் தகுதி, அறிவாற்றல், அனுபவம், பயிற்சி போன்றவற்றின் அடிப்படையில், நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி நியமித்துள்ளது. இந்த நிபுணர்கள் அடங்கிய குழுவின் உறுப்பினர்கள் ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளின் மதிப்பீட்டை மேற்கொள்வார்கள்.

## 4.0 மதிப்பீட்டிற்கான தகுதி

4.1. TMC அல்லது TUFS-ன் கீழ் அல்லது தனது சொந்த நிதியின் மூலம் நவீனமயமாக்கப்பட்ட மற்றும் **பிற்சேர்க்கை-I-**ல் பட்டியலிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகுதிவிதிகளைப் பூர்த்தி செய்கின்ற எந்தவொரு ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலையும் டெக்ஸ்டைல்ஸ் கமிட்டியால் மதிப்பிடப்படும் தகுதியைப் பெறுகிறது.

4.2. ஒரே வளாகத்தில் ஹைபிரிட் வசதிகளை (வழக்கத்திலுள்ள மற்றும் நவீன வசதிகள் இரண்டையுமே) கொண்டுள்ள ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகள் மதிப்பீட்டிற்குத் தகுதியானவை அல்ல.

## 5.0 பதிவு மற்றும் மதிப்பீட்டிற்கான விண்ணப்பம்

மதிப்பீடு மற்றும் தர நிர்ணயத்தில் ஆர்வமுள்ள, மற்றும் தகுதிவிதிகளைப் பூர்த்தி செய்கின்ற (**பிற்சேர்க்கை-I)** ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலை, பதிவுக்காக தனது விண்ணப்பத்தை பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் **(பிற்சேர்க்கை-II)** பதிவுக் கட்டணமான ரூ. 5000/- மற்றும் தர நிர்ணயத்திற்கான கட்டணத்துடன் சேர்த்து டெக்ஸ்டைல்ஸ் கமிட்டியிடம் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலை வழங்கியுள்ள விவரங்களின் அடிப்படையில், மற்ற அம்சங்களுடன் சேர்த்து, குறைந்தபட்ச தகுதிவிதிகள் பூர்த்தி செய்யப்படுகின்றனவா என்பதை அறிவதற்காக, மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு (ARC) விண்ணப்பத்தை ஆராயும். முதல் பார்வையில், அத்தொழிற்சாலை மதிப்பீட்டிற்குத் தகுதி பெறுவதாகக் கண்டறியப்பட்டால், அந்த விண்ணப்பம் மதிப்பீட்டிற்காகப் பதிவு செய்யப்படும்.

## 6.0 தர நிர்ணயத்திற்கான கட்டணம்

மூன்றாண்டு காலத்திற்கான தர நிர்ணயக் கட்டணம் ரூ.35,000/- மற்றும் பொருந்தும் வரிகள் ஆகும். இத்தர நிர்ணயக் கட்டணத்தில், மூன்றாண்டு காலத்திற்குள் மேற்கொள்ளப்படும் ஒரு இடைக்கால கண்காணிப்பு மதிப்பீடும் அடங்கும்.

## 7.0 மதிப்பீட்டுச் செயல்முறை

### 7.1 ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளுக்கு மதிப்பீட்டுக் குழுவின் வருகை

மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக, நிபுணர்கள் குழுவிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் கொண்ட அதிகாரிகள் குழு ஒன்றை ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைக்கு அனுப்புவதற்கு மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு (ARC) ஏற்பாடு செய்யும். மதிப்பீடு செய்யும் சமயத்தில் அத்தொழிற்சாலை இயங்கிக் கொண்டிருப்பதையும், மதிப்பீட்டிற்காக கருத்தில் கொள்ளப்பட்ட அளவீடுகள் பயன்படுத்தப்படுவதை அல்லது நடைமுறையில் இருப்பதையும் இக்குழு உறுதி செய்யும். இயந்திரம் மற்றும் கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்ட, உள்கட்டமைப்பின் ஒவ்வொரு அம்சத்தையும் இக்குழு ஆய்வு செய்யும்; மதிப்பீடு சமயத்தில் தொழில்சாலையில் காணப்படும் பணி நிலைகள் உட்பட, நடைமுறையில் இருக்கும் மேலாண்மை செயல்முறைகளை ஆராயும்; மற்றும் மாசு அளவை அறிவதற்காக பருத்தியின் மாதிரியை பார்வையால் ஆராயும். மதிப்பீடு செய்யப்பட வேண்டிய உள்கட்டமைப்பு மற்றும் மேலாண்மை அளவீடுகள் பற்றிய விவரங்கள் மதிப்பீட்டுப் படிவத்தில் (**பிற்சேர்க்கை-III**) வழங்கப்பட்டுள்ளன. மதிப்பீடு மேற்கொள்ளும் குழுவானது, மாசு உள்ளிட்ட ஒவ்வொரு உள்ளகட்டமைப்பு அளவீடு மற்றும் மேலாண்மை அளவீட்டிற்கும் மதிப்பெண்களை வழங்கும். உள்ளகட்டமைப்பு அளவீடுகள் மற்றும் மேலாண்மை அளவீடுகளுக்கு மதிப்பெண் வழங்கும் திட்டமானது **பிற்சேர்க்கை-IV-ன்** அட்டவணைகள் I மற்றும் II-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்குழு மதிப்பீட்டு அறிக்கையை (**பிற்சேர்க்கை-III**) தயாரித்து, அதனை மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவிடம் சமர்ப்பிக்கும்.

### 7.2 மாசின் அளவை அறிவதற்கான பார்வை சார்ந்த சோதனை

மாசு அளவின் மதிப்பீட்டிற்காக, மதிப்பீட்டுக் குழு வரிசைமுறையின்றி ஒரு பொதியினைத் தேர்ந்தெடுத்து, அதனை பிரித்துப் பார்க்கும். தேர்ந்தெடுக்கப்படும் பொதியானது, மதிப்பீட்டின் நாளன்று பருத்தியைப் பஞ்சாக பிரித்தெடுத்து, பஞ்சினை பொதிகளாக அழுத்துகின்ற செயல்முறைவரை பதப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு பிரித்த பொதியிலிருந்து சுமார் 25 கிலோ பஞ்சு, மாசுப் பொருட்களை முழுமையாகக் காண்பதற்கு ஏதுவாக, குழுவின் முன்னிலையில் ஒரு தளத்தின் மீது பரப்பப்பட வேண்டும். பருத்தியிலுள்ள மாசுப் பொருட்களை மதிப்பீட்டுக் குழு பார்வையால் ஆராய்ந்து, சோதித்து, மதிப்பெண் திட்டத்தின்படி **(பிற்சேர்க்கை-IV)** மதிப்பெண்களை வழங்கும்.

### 7.3 புகைப்படங்கள்

எழுத்துமூல அறிக்கைகளுக்கு ஆதரவாகவும், அவற்றை பலப்படுத்தும் விதமாகவும், தேவைக்கேற்ப உள்ளகட்டமைப்பு அம்சங்களின் புகைப்படங்களை மதிப்பீட்டுக் குழு எடுக்கலாம். அவசியம் என்று கருதப்படுவதற்கேற்ப, மேலாண்மை அளவீடுகளின் கூடுதல் புகைப்படங்களையும் இக்குழு எடுக்கலாம். அறிக்கையுடன் சேர்த்து இப்புகைப்படங்களும் மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவிடம் (ARC) சமர்ப்பிக்கப்படும்.

## 8.0 தொகுத்தல்

குழுவின் மதிப்பீட்டு அறிக்கையை, மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு (ARC) ஆராயும். உள்கட்டமைப்பு அளவீடுகளுக்காக பெறப்பட்ட % மதிப்பெண், மேலாண்மை அளவீடுகளுக்காக பெறப்பட்ட % மதிப்பெண், குறைந்தபட்ச தகுதி அளவீடுகளுக்கான விதிமுறைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அவசியமான அளவீடுகளுக்கான விதிமுறைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு தொகுக்கும். உள்கட்டமைப்பு அளவீடுகள் மற்றும் மேலாண்மை அளவீடுகள் ஆகிய இரண்டிலுமே ஒரு தொழிற்சாலை 80% அல்லது அதற்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்றிருந்தால், நான்கு நட்சத்திர மற்றும் ஐந்து நட்சத்திர தரநிலைகளுக்கான கூடுதல் தேவைகளை பூர்த்தி செய்கின்ற நிலையையும் மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு தொகுக்கும். இத்தொகுக்கப்பட்ட அறிக்கையை தனது பரிந்துரையுடனும் **(பிற்சேர்க்கை-V)**, மதிப்பீட்டு அறிக்கையுடனும் சேர்த்து தொழில்நுட்பத் தர நிர்ணய தீர்வுக் குழுவுக்கு மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு அனுப்பி வைக்கும்.

## 9.0 தரநிலையை வழங்குதல்

9.1. தொழில்நுட்பத் தர நிர்ணய தீர்வுக் குழுவானது, மதிப்பீட்டு குழுவின் மதிப்பீட்டு அறிக்கை, மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவின் தொகுக்கப்பட்ட அறிக்கை மற்றும் பரிந்துரைகளை

மறுஆய்வு செய்து, பொருந்தும் தரநிலையை வழங்கும் அல்லது வேறுவகையில் **பிற்சேர்க்கை-I-**ல் கொடுக்கப்பட்டுள்ள தகுதிபெறும் விதிகளின்படி தீர்வை வழங்கும்.

9.2. மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவானது (ARC), தொழில்நுட்பத் தர நிர்ணய தீர்வுக் குழு வழங்கியுள்ள தரநிர்ணயத்தை, மதிப்பீட்டு நிலை அறிக்கையுடன் சேர்த்து (Assessment Status Report - ASR), சம்பந்தப்பட்ட ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைக்குத் தெரிவிக்கும்.

9.3.1 மதிப்பிடப்பட்ட ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலை, **பிற்சேர்க்கை-I**-ல் கொடுக்கப்பட்டுள்ள தகுதிபெறும் விதிகளின்படி எந்தவொரு தர நிர்ணயத்திற்கும் தகுதி பெறவில்லையென்றால், மதிப்பீட்டு நிலை அறிக்கையுடன் சேர்த்து (ASR), அத்தொழிற்சாலைக்கு “தற்காலிக தரநிர்ணய நிலை” (Provisional Rated Status) வழங்கப்படும். இத்தொழிற்சாலை, அவசியமான மேம்பாடுகளைச் செய்தபின் உரிய கட்டணத்தைச் செலுத்தி, மறுமதிப்பீட்டைக் கோரலாம்.

9.3.2 இருப்பினும், மற்ற வகையில் நட்சத்திர தர நிர்ணயத்திற்கு ஒரு தொழிற்சாலை தகுதிபெற்று, குறைந்தபட்ச தகுதி விதிகளின் கீழ் உள்ள அளவீடுகளில் ஏதேனும் ஒன்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால், அவ்வப்போது எடுக்கப்படும் முடிவின் அடிப்படையில், குறிப்பிட்ட காலத்திற்கு ஒற்றை நட்சத்திர தரநிலை வழங்கப்படும், மற்றும் அக்காலகட்டத்திற்குள் அத்தொழிற்சாலை தேவையான மேம்பாடுகளை மேற்கொள்வதன் மூலம், அக்குறிப்பிட்ட அளவீடுகளின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

9.3.3 தேவையைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில், அக்குறிப்பிட்ட அளவீடுகளுக்கு அனுமதிக்கப்பட்ட மதிப்பெண்கள் வழங்கப்படும் மற்றும் அத்தொழிற்சாலைக்குப் பொருந்தும் நட்சத்திர தரநிலையும் வழங்கப்படும்.

9.3.4 அதே சமயம், குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அத்தொழிற்சாலை தேவையைப் பூர்த்தி செய்யாவிட்டால், தொழிற்சாலைக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒற்றை நட்சத்திர தரநிலையானது விலக்கிக் கொள்ளப்படும்.

9.4 மற்ற வகையில் நட்சத்திர தர நிர்ணயத்திற்குத் தகுதி பெற்ற ஒரு தொழிற்சாலை வளாகத்தின் மேலாக ஏதேனும் LT / HT மின்னிணைப்பு செல்லுமானால், LT / HT இணைப்பு தொடர்பான “ஆலோசனைக் குறிப்புடன்” சேர்த்து, அத்தொழிற்சாலைக்கு பொருந்தும் நட்சத்திர தரநிலை வழங்கப்படும்.

## 10.0 தரநிலை சான்றிதழ் / தற்காலிக தரநிலைக்கான கடிதம்

ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலை தகுதி பெற்ற தர நிர்ணயத்திற்கேற்ப, ஒரு தர நிர்ணய சான்றிதழ் அல்லது தற்காலிக தர நிர்ணயத்திற்கான கடிதம் வழங்கப்படும், இதில் வழங்கப்பட்டுள்ள தர நிர்ணயம் அல்லது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தற்காலிக தரநிலை, வழங்கப்பட்ட தேதி மற்றும் செல்லத்தக்க காலம் ஆகியவை இடம்பெற்றிருக்கும். நூற்பாலைகள். பஞ்சு வணிகர்கள் /வர்த்தகர்கள், ஜின்னிங் தொழிற்சாலைகள் போன்ற அனைத்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் தகவலளிக்கும் பொருட்டு, தர நிர்ணயம் அல்லது

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தற்காலிக தரநிலை பற்றிய விவரங்கள் டெக்ஸ்டைல்ஸ் கமிட்டியின் வலைத்தளத்திலும் வெளியிடப்படும்.

## 11.0 தர நிர்ணயத்தின் பயன்பாடு

ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நட்சத்திர தர நிர்ணயமானது, அங்கீகாரத்திற்காகவும், தரமான பிரித்தெடுக்கப்பட்ட பஞ்சினை உற்பத்தி செய்யும் அதன் திறனுக்கான சந்தைப்படுத்தும் கருவியாகப் பயன்படுத்துவதற்காகவும் மட்டுமேயன்றி, தயாரிப்பின் சான்றளிப்பாக பஞ்சுப் பொதியின் மீது பயன்படுத்துவதற்காக அல்ல.

## 12.0 தர நிர்ணயத்தின் செல்லத்தக்க காலம் மற்றும் கண்காணிப்பு மதிப்பீடு

12.1.1 ஒதுக்கீடு செய்யப்பட்ட நட்சத்திர தரநிலையானது 3 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். இயந்திரங்கள், கட்டிடம் சார்ந்த உள்கட்டமைப்புகள் போன்ற வசதிகள் தொடர்ந்து சரியாக உள்ளனவா என்பதை உறுதி செய்வதற்காக, செல்லத்தக்க காலமான மூன்றாண்டுகளுக்குள் சான்றளிக்கப்பட்ட ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலையில் ஓர் இடைக்கால கண்காணிப்பு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி ஏற்பாடு செய்யும். இருப்பினும், தேவைப்படுமானால், கூடுதல் மதிப்பீடுகளும் ஏற்பாடு செய்யப்படலாம்.

12.1.2 இடைக்கால கண்காணிப்பு மதிப்பீட்டிற்காக, நிபுணர்கள் குழுவிலிருந்து அலுவலர்/களை அனுப்புவதற்கு மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு (ARC) ஏற்பாடு செய்யும்.

12.1.3 இயந்திரங்கள், கட்டிடம் சார்ந்த உள்கட்டமைப்புகள் போன்ற வசதிகள் தொடர்ந்து சரியாக உள்ளனவா என்பதை அலுவலர்/கள் சரிபார்த்துவிட்டு, கண்காணிப்பு மதிப்பீட்டு அறிக்கையை பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் (**பிற்சேர்க்கை - VI**) சமர்ப்பிப்பார்கள்.

12.2.1 தற்காலிக தரநிலையானது, தொழிற்சாலைகளுக்கு ஓராண்டு காலத்திற்கு வழங்கப்படும். ஓராண்டுக்குள், மதிப்பீட்டு நிலை அறிக்கையில் (ASR) குறிப்பிடப்பட்டுள்ள அளவீடுகளில் மேம்பாடுகளை மேற்கொண்டபின், தர நிர்ணய மறுமதிப்பீட்டிற்கு தொழிற்சாலைகள் கோர வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், தற்காலிக தரநிலையானது, தகுதியின் அடிப்படையில், ஒவ்வொரு தொழிற்சாலைக்கேற்ப நீட்டிக்கப்படலாம்.

12.2.2 மறுமதிப்பீட்டின் அடிப்படையில், 'தற்காலிக தரநிலையின்" கீழ் உள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு வழங்கப்படும் நட்சத்திர தர நிர்ணயமானது, தற்காலிக தரநிலைக்கான கடிதம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்தின் மீதமுள்ள பகுதி முழுவதும் செல்லத்தக்கதாக இருக்கும்.

12.3.1 மற்ற வகையில் நட்சத்திர தரநிர்ணயத்திற்கு தகுதி பெற்றாலும், குறைந்தபட்ச தகுதிவிதிகளின் கீழ் உள்ள அளவீடுகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்யாத தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் வரம்புக்குட்பட்ட காலத்திற்கான ஒற்றை நட்சத்திர தர நிர்ணயமானது, அவ்வப்போது முடிவுசெய்யப்படும் காலத்திற்கு செல்லுபடியாகும்.

12.3.2 அக்குறிப்பிட்ட அளவீடுகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் வழங்கப்படுகின்ற பொருந்தும் நட்சத்திர தர நிர்ணயமானது, ஆரம்பக்கட்ட ஒற்றை நட்சத்திர தர நிர்ணயச் சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்தின் மீதமுள்ள பகுதி முழுவதும் செல்லுபடியாகும்.

## 13.0 ஒதுக்கப்பட்ட தர நிர்ணயத்தைக் குறைத்தல்

இடைக்கால கண்காணிப்பு மதிப்பீடு/கூடுதல் மதிப்பீட்டின்போது, உள்கட்டமைப்பு மற்றும் மேலாண்மை நடைமுறைகளைப் பொறுத்த மட்டில், ஆரம்பக்கட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடும்போது, ஒரு தொழிற்சாலையின் தரம் குறைந்துள்ளது கண்டறியப்பட்டால், அத்தொழிற்சாலை “தர மதிப்புக் குறைப்பு” செய்யப்படலாம். இவ்விவகாரத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக, அத்தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட தர நிர்ணயத்தின் மதிப்புக்குறைப்பு தொடர்பான தனது பரிந்துரையை தொழில்நுட்பத் தர நிர்ணய தீர்வுக் குழுவுக்கு (TRAC) மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு (ARC) அனுப்பி வைக்கும். மதிப்புக் குறைப்பு தொடர்பான பொருந்தும் முடிவை தொழில்நுட்பத் தர நிர்ணய தீர்வுக் குழு எடுப்பதுடன், சூழ்நிலைக்கு ஏற்றவாறு குறைந்த தர நிர்ணயத்தை வழங்கலாம் அல்லது வழங்கப்பட்டுள்ள தர நிர்ணயத்தை விலக்கிக் கொள்ளலாம். இது தொடர்பாக, டெக்ஸ்டைல்ஸ் கமிட்டியின் செயலர் அல்லது இயக்குனரின் கையொப்பத்துடன் அத்தொழிற்சாலைக்கு ஒரு கடிதம் அனுப்பப்படும் மற்றும் இவ்விவரம் டெக்ஸ்டைல்ஸ் கமிட்டியின் வலைத்தளத்திலும் புதுப்பிக்கப்படும்.

## 14.0 தர நிர்ணயத்தைப் புதுப்பித்தல்

14.1 சான்றளிக்கப்பட்ட ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகள், தரநிர்ணயத்தைப் புதுப்பிப்பதற்காக அது காலாவதியாவதற்கு முன் விண்ணப்பிக்கலாம். ஆனால், நட்சத்திர தர நிர்ணய சான்றிதழ் காலாவதியானதிலிருந்து ஓராண்டுக்கு மேல் ஆகாமல் இருப்பது விரும்பத்தக்கது. நட்சத்திர தர நிர்ணய சான்றிதழ் காலாவதியானதிலிருந்து ஓராண்டுக்குப்பின் புதுப்பித்தலைக் கோருகின்ற தொழிற்சாலைகள், தனித் தனி அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

14.2 மேலும் மூன்று ஆண்டுகளுக்கு தர நிர்ணயத்தை புதுபிப்பதற்கான கட்டணம் ரூ. 25, 000/- மற்றும் பொருந்தும் வரிகள் ஆகும். தர நிர்ணயத்தை புதுபிப்பதற்கான கட்டணத்தில், மூன்றாண்டு காலத்திற்குள் மேற்கொள்ளப்படும் ஓர் இடைக்கால கண்காணிப்பு மதிப்பீடும் அடங்கும்.

14.3 புதுப்பித்தல் மதிப்பீட்டிற்காக நிபுணர்கள் குழுவிலிருந்து அலுவலர்களின் இரு உறுப்பினர் குழு ஒன்றை அனுப்புவதற்கு மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு (ARC) ஏற்பாடு செய்யும்.

14.4 இக்குழு, இயந்திரங்கள், கட்டிடம் சார்ந்த உள்கட்டமைப்புகள் போன்ற வசதிகள் தொடர்ந்து சரியாக உள்ளனவா என்பதை சரிபார்த்தபின், புதுப்பித்தல் மதிப்பீடு அறிக்கையை பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் (**பிற்சேர்க்கை -VII**) சமர்ப்பிக்கும். இக்குழு, தொழிற்சாலை தெரிவித்துள்ள உள்ளகட்டமைப்பில் செய்யப்பட்டுள்ள கூடுதல் சேர்ப்புகள்/மேம்பாடுகள்

ஏதேனும் இருப்பின், அவற்றையும் சரிபார்த்து, புதுப்பித்தல் மதிப்பீடு அறிக்கையில் பதிவு செய்யும்.

14.5 மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவானது (ARC), புதுப்பித்தல் மதிப்பீட்டு அறிக்கையை ஆய்வு செய்து, தனது பரிந்துரையை இயக்குனரிடம் (EP & QA) சமர்ப்பிக்கும்.

14.6 புதுப்பித்தல் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ARC-யின் பரிந்துரைகளின் அடிப்படையில், தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ள நட்சத்திர தர நிர்ணயத்தை புதுப்பிப்பதற்கு அல்லது மறுப்பதற்கு இயக்குனர் (EP & QA) ஒப்புதல் அளிப்பார்.

14.7 தர நிர்ணய புதுப்பித்தலுக்கான ஒப்புதல் கிடைத்தவுடன், மேலும் மூன்றாண்டு காலத்திற்கு செல்லத்தக்க வகையில் நட்சத்திர தர நிர்ணயத்தின் புதுப்பித்தலுக்கான சான்றிதழை வழங்குவதற்கு மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு (ARC) ஏற்பாடு செய்யும் மற்றும் ஆரம்பக்கட்ட சான்றளிப்பின்போது மேற்கொள்ளப்பட்டதைப்போல், ஓர் இடைக்கால கண்காணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

14.8 தர நிர்ணய புதுப்பித்தலுக்கு ஒப்புதல் கிடைக்கவில்லையென்றால், தர நிர்ணயம் புதுப்பிக்கப்படாத விவரத்தை, காரணங்களுடன் சேர்த்து, தொழிற்சாலைக்கு மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு (ARC) தெரிவிக்கும்.

## 15.0 உயர் தர நிர்ணயத்திற்கான மதிப்பீடு

15.1 நட்சத்திர தர நிர்ணயம் பெற்ற ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகள், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும்/அல்லது மேலாண்மை செயல்முறைகளில் செய்யப்பட்டுள்ள கூடுதல் மேம்பாடுகளின் அடிப்படையில் மேலும் உயர்ந்த நட்சத்திர தர நிர்ணயத்தைப் பெற விரும்பினால், அவர்கள் தடையின்றி உயர் தர நிர்ணயத்திற்காக விண்ணப்பிக்கலாம் மற்றும் இடைக்கால கண்காணிப்பு மதிப்பீட்டின்போது அல்லது புதுப்பித்தல் மதிப்பீட்டின்போது, புதிய மதிப்பீட்டைக் கோரலாம். நட்சத்திர தர நிர்ணய சான்றிதழ் செல்லுபடியாகும் காலகட்டத்தில், எந்த நேரத்திலும், உரிய மறுமதிப்பீட்டுக் கட்டணத்தைச் செலுத்தி, உயர்ந்த நட்சத்திர தர நிர்ணயத்திற்காக ஒரு மறுமதிப்பீட்டை மேற்கொள்ளும்படி கேட்பதன் மூலமும் தொழிற்சாலைகள் புதிய மதிப்பீட்டைக் கோரலாம்.

15.2 உயர்ந்த நட்சத்திர தர நிர்ணயத்திற்காக ஒரு மறுமதிப்பீட்டை மேற்கொள்ளும்படி கேட்கும் கோரிக்கை கடிதம் ஒன்றை தொழிற்சாலை சமர்ப்பிக்க வேண்டும், அதில், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் / அல்லது மேலாண்மை செயல்முறைகளில் செய்யப்பட்டுள்ள கூடுதல் மேம்பாடுகளைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். இக்கோரிக்கை கடிதத்தை போதிய கால அவகாசத்தில் முன்கூட்டியே தொழிற்சாலைகள் சமர்ப்பிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

15.3 கோரிக்கைக் கடிதத்தைப் பெற்றவுடன், புதிய மதிப்பீட்டிற்காக நிபுணர்கள் குழுவிலிருந்து அலுவலர்/களை நியமிப்பதற்கு மதிப்பீடு மற்றும் தர நிர்ணயப் பிரிவு (ARC) ஏற்பாடு செய்யும்.

15.4 நியமிக்கப்பட்ட அலுவலர்/கள் தொழிற்சாலை தெரிவித்துள்ள மேம்பாடுகளை சரி பார்ப்பார்கள். முதல் பார்வையில், அத்தொழிற்சாலை உயர் தர நிர்ணயத்திற்கு தகுதிபெறுவதாகக் கண்டறியப்பட்டால், ஆரம்பக்கட்ட மதிப்பீட்டில் செய்ததைப்போன்ற அதே செயல்முறையைப் பின்பற்றி புதிய மதிப்பீட்டை அலுவலர்/கள் மேற்கொள்வார்கள் மற்றும் 'பிற்சேர்க்கை – III'-ல் உள்ள படிவத்தில் புகைப்படங்களுடன் அறிக்கையை சமர்ப்பிப்பார்கள். ஆரம்பக்கட்ட மதிப்பீட்டில் செய்ததைப்போன்ற அதே செயல்முறையைப் பின்பற்றி, மதிப்பீடு மற்றும் தர நிர்ணய விதிமுறைகளின்படி பொருந்தும் தர நிர்ணயங்கள் வழங்கப்படும்.

15.5 புதிய மதிப்பீட்டிற்கு வழங்கப்பட்ட தர நிர்ணயமானது, முந்தைய தர நிர்ணய சான்றிதழின் செல்லத்தக்க காலத்தின் மீதமிருக்கும் பகுதி முடிய செல்லுபடியாகும்.

## 16.0 கோரிக்கை அடிப்படையில் மறுமதிப்பீட்டிற்கான ஏற்பாடு மற்றும் மறுமதிப்பீட்டு கட்டணம்

16.1 திட்டமிட்ட மதிப்பீடு மற்றும் இடைக்கால கண்காணிப்பு மதிப்பீட்டைத் தவிர, ஒரு தொழிற்சாலையானது நட்சத்திர தரநிர்ணயத்தை மேம்படுத்துவதற்காக அல்லது தற்காலிக தரநிர்ணய நிலையிலிருந்து நட்சத்திர தரநிர்ணயத்தை அடைவதற்காக அல்லது வரம்புக்குட்பட்ட காலத்திற்கான ஒற்றை நட்சத்திர தர நிர்ணயத்திலிருந்து வழக்கமான நட்சத்திர தரநிர்ணயத்தை அடைவதற்காக மறுமதிப்பீட்டைக் கோரலாம்.

16.2 மறுமதிப்பீடு கட்டணம் ரூ.15,000/- ஆகும்.

16.3 இருப்பினும், தர நிர்ணயத்திற்கான சான்றளிப்பு / தற்காலிக தர நிலை குறித்த கடிதத்தின் தேதியிலிருந்து ஓராண்டுக்குள் மறுமதிப்பீட்டைக் கோரும் தொழிற்சாலைகளுக்கு, மறுமதிப்பீட்டுக் கட்டணத்திலிருந்து ஒருமுறை விலக்கு அளிக்கப்படும்.

16.4 பரஸ்பர ஒப்புதலின்பேரில் திட்டமிடப்பட்டு, மதிப்பீட்டுக் குழு வருகை தரும் நாளன்று மூடப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளும் மறுமதிப்பீட்டைக் கோரலாம். முந்தைய வருகைத் தேதியிலிருந்து ஓராண்டுக்குள் மறுமதிப்பீட்டைக் கோரும் தொழிற்சாலைகளுக்கு மறுமதிப்பீட்டுக் கட்டணத்திலிருந்து ஒருமுறை விலக்கு அளிக்கப்படும்.